தெரிவிக்கிறார்கள். ஆனால் மற்ற உறுப்பினர்கள் பலர் இன்னும் ஒரு மணி நேரம் தாங்க முடியுமா என்று என்னிடத்திலே ஒரு கோரிக்கையை வைக்கிறார்கள். திரு. பழனிசாமி உட்பட. எனவே, பதிலுரையைத் திங்கட்கிழமை வைத்துக் கொள்ளலாம். பேரவை முன்னவரவர்கள்.

பிற்பகல் 2-30

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலுரையைத் துவங்கி விட்டதன் காரணமாக, இதோடு நிறுத்தி, திங்கட்கிழமை காலை, முறைப்படி எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையின் தொடர்ச்சி, திங்கட்கிழமை, கேள்வி நேரத்திற்குப் பின்னர் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் (25.4.1994) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

103. சென்னை மற்றும் உதகமண்டல குதிரைப் பந்தயத்திடல்களில் நடைபெறும் வழக்கமான பந்தயம் மற்றும் இடைப்பந்தயங்களின் மீது வரி மற்றும் மேல் வரியினை விதிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 28.1.1994 ஆம் நாளிட்ட 28 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1935 ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

108. மனுக்கள் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை, 1993-94.

109. மனுக்கள் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை, 1993-94.

110. மனுக்கள் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை, 1993-94.